குறிப்பாக தமிழ்நாட்டில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள், திருப்பூர் என 4 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனையில், சென்னை புறநகர் பகுதியான செங்கல்பட்டு மாவட்டத்தின் மறைமலைநகர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள படப்பை பகுதிகளில் வடமாநில தொழிலாளர்கள் அதிகளவில் வசித்து வரும் இடங்களில் உள்ளூர் போலீசார் உதவியுடன் என்ஐஏ அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் மறைமலைநகர் கருநீலம் பகுதியில் தங்கி கோவிந்தாபுரம் பகுதியில் ஜூஸ் மற்றும் டீக்கடையில் தங்கி வேலை செய்து வந்த திரிபுரா மாநிலத்தை சேர்ந்த எம்.டி.முன்னா(30) மற்றும் அவருடன் தங்கி இருந்த மேற்குவங்க மாநில கொல்கத்தாவை சேர்ந்த மியான் (28) ஆகிய 2 பேரிடம் தீவிர விசாரணை நடத்தினர்.

இவர்கள் இருவரும், இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ள பாப்புலர் ஃப்ரண்ட்ஸ் அப் இந்தியா அமைப்பில் நேரடியாக தொடர்பில் இருந்தது தெரியவந்தது. அதில் எம்.டி.முன்னா வங்கதேச நாட்டை சேர்ந்தவர் என்றும், இவர், திரிபுரா மாநிலத்தில் பிறந்தவர் போன்று போலியான ஆதார் அட்டை தயாரித்து அதன் மூலம் கூலி தொழிலாளி போல் ஜூஸ் கடையில் பணியாற்றி வந்தது தெரியவந்தது. இவர் தனது கூட்டாளியான கொல்கத்தாவை சேர்ந்த மியான் என்பவருடன் சேர்ந்து கடந்த 2 மாதங்களாக ஜூஸ் கடையில் வேலை செய்து வந்துள்ளார்.

அதோடு இல்லாமல், எம்.டி.முன்னா சட்டவிரோதமாக வங்கதேச நாட்டை சேர்ந்தவர்களுக்கு திரிபுரா மாநிலத்தை சேர்ந்தவர் போல் போலியாக ஆதார் அட்டை தயாரித்து கொடுத்து, அதன் மூலம் இந்திய குடியுரிமை பெற்ற நபர் போல் சென்னை, புதுச்சேரி பகுதியில் கூலி தொழிலாளிகள் போல் பணியாற்ற உதவி செய்து இருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. விசாரணைக்கு பிறகு வங்க தேசத்தை சேர்ந்த எம்.டி.முன்னா மற்றும் அவரது நண்பரான மியான் ஆகியோரை கைது செய்தனர். எம்.டி.முன்னா தங்கி இருந்த அறையில் இருந்து வழக்கு தொடர்பான பல முக்கிய ஆவணங்களை என்ஐஏ அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மேலும், எம்.டி.முன்னா அளித்த தகவலின் படி, ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள படப்பை பகுதியில் வங்க தேச நாட்டை சேர்ந்த ஒரு வாலிபர் போலி முகவரி மூலம் தங்கியிருப்பதாக என்ஐஏ அதிகாரிகளுக்கு தெரியவந்தது. அதனை தொடர்ந்து, என் ஐஏ அதிகாரிகள் குழு ஒன்று படப்பை பகுதியில் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில், வண்டலூர்-வாலாஜாபாத் சாலை, கீழ்படப்பை பகுதியில் ஒரு தனியார் விடுதியில் சகாபுதீன்(30) என்பவர் தங்கி, அதே பகுதியில் உள்ள ஒரு ஓட்டல் ஒன்றில் தொழிலாளியாக வேலை செய்து வருவதை என்ஐஏ அதிகாரிகள் கண்டறிந்தனர்.

அதை தொடர்ந்து, அந்த விடுதிக்கு சென்று சட்ட விரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தை சேர்ந்த சகாபுதீன் என்பவரை என்ஐஏ அதிகாரிகள் அதிரடியாக கைது செய்தனர். விசாரணையில், அவர் கடந்த 2 மாதங்களாக இவ்விடுதியில் போலி முகவரி மூலம் தங்கி தனியார் ஓட்டலில் வேலை பார்த்து வந்து உறுதியானது. அவர் தங்கியிருந்த அறையை சோதனை செய்த போது பல்வேறு நபர்களின் போலியான ஆதார் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட சகாபுதீன், எப்படி வங்கதேசத்தில் இருந்து இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக வந்தார், இந்தியாவில் ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் நடத்த திட்டமிட்டு உள்ளாரா, இவருக்கு பல்வேறு தீவிரவாத இயக்கங்களுடன் ஏதேனும் தொடர்பு உள்ளதா என பல்வேறு கோணங்களில் என்ஐஏ அதிகாரிகள் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

மேலும், சகாபுதீன் கொடுத்த தகவலின் படி என்ஐஏ அதிகாரிகள் திருவள்ளூர் மாவட்டம் ஆரம்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட துராபள்ளம் கிராமம் பிள்ளையார் கோயில் தெருவில் சட்டவிரோதமாக வங்கதேசத்தை சேர்ந்த சப்ரான் என்பவர் தங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது.

அதன்படி என்ஐஏ அதிகாரிகள் நேற்று ஆரம்பாக்கம் போலீசார் உதவியுடன் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது சம்பந்தப்பட்ட நபர், அந்த இடத்தை விட்டு சில நாட்களுக்கு முன்பு இடம் பெயர்ந்துவிட்டது தெரியவந்தது. இருந்தாலும், அவர் தங்க இடம் கொடுத்த வீட்டின் உரிமையாளரிடம் என்ஐஏ அதிகாரிகள் அரை மணி நேரம் விசாரணை நடத்தினர். அப்போது அவர் அளித்த சில தகவலின் படி என்ஐஏ அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர்.

மேலும், கைது செய்யப்பட்ட வங்கதேச நாட்டை சேர்ந்த எம்.டி.முன்னா, சகாபுதீன் மற்றும் மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தா பகுதியை சேர்ந்த மியான் ஆகியோர் அளித்த தகவலின் படி, சென்னையில் பள்ளிக்கரணை, படப்பை, பெரும்பாக்கம், மறைமலைநகர், கருநீலம், ஆரம்பாக்கம் பகுதியில் சோதனை நடத்தினர்.

தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் அதிகளவில் பணியாற்றி வரும் திருப்பூர் மாவட்டத்தில் என்ஐஏ அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர். இந்த சோதனையில் திருப்பூரில் உள்ள பனியன் தயாரிப்பு தொழிற்சாலைகளில் வங்கதேச நாட்டை சேர்ந்தவர்கள் யாரேனும் போலி ஆதார் அட்டைகள் மூலம் பணியாற்றி வருகின்றனரா என சோதனை நடத்தினர். குறிப்பாக திருப்பூரை பல்லடம் அருகே உள்ள அருள்புரம் குமரன் நகர், வளையங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள 3 பனியன் தொழிற்சாலைகளில் என்ஐஏ அதிகாரிகள் வடமாநில தொழிலாளர்களின் ஆவணங்களை சரிபார்க்கும் வகையில் சோதனை மேற்கொண்டனர்.

கடந்த மாதம் இறுதியில் சென்னை அடுத்த அம்பத்தூர் பகுதியில் வடமாநில தொழிலாளர்கள் சிலர் தகராறில் ஈடுபட்டு விசாரணைக்கு சென்ற காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவம் தொடர்பாக நடத்திய விசாரணையில் வடமாநில தொழிலார்கள் போல், சிலர் தீவிரவாதத்தை பரப்பும் செயல்களில் ஈடுபடும் வகையில் ஊடுருவி இருப்பதாக என்ஐஏ அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதன்படியே சென்னை மற்றும் புறநகர் பகுதியில் சோதனை நடத்தியதாக என்ஐஏ தரப்பில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

நாடு முழுவதும் 10 மாநிலங்களில் இந்த இந்த சோதனை நடந்து வருகிறது. இந்த சோதனை முடிந்தால் தான் கட்டிட வேலை என கூலி தொழிலாளர்கள் போல் வங்கதேசம் உள்ளிட்ட வெளிநாடுகளை சேர்ந்தவர்கன் எத்தனை பேர் இந்தியாவில் சட்டவிரோதமாக ஊடுருவி உள்ளனர் என்ற தகவல் முழுமையாக தெரியவரும் என என்ஐஏ அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைமலைநகர் கருநீலம் பகுதியில் தங்கியிருந்து வேலை பார்த்த, தடை செய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்த 2 பேரையும், படப்பை விடுதியில் இருந்த வங்கதேச வாலிபரையும் கைது செய்து அழைத்து செல்கின்றனர்.

என்ஐஏ ரெய்டு 44 பேர் கைது

நாடு முழுவதும் என்ஐஏ நடத்திய சோதனையில் ஆள்கடத்தலில் ஈடுபட்ட கும்பலை சேர்ந்த 44 பேர் கைது செய்யப்பட்டனர். திரிபுரா, அசாம், மேற்கு வங்காளம், கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா, அரியானா, ராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் மற்றும் புதுச்சேரி யூனியன்ஆகிய பகுதிகளில் 55 இடங்களில் இந்த சோதனை நடந்தது. இதில் 21 பேர் திரிபுராவில், 10 பேர் கர்நாடகாவில், 5 பேர் அசாமில், 3 பேர் மேற்கு வங்கத்தில், தமிழ்நாட்டில் 2 பேர் , புதுச்சேரி, தெலுங்கானா, அரியானாவில் தலா ஒருவர் கைது செய்யப்பட்டனர். ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களில் நடத்தப்பட்ட சோதனையின் போது ஜாபர் ஆலம் என அடையாளம் காணப்பட்ட மியான்மரை சேர்ந்த ரோஹிங்கியா முஸ்லிம் உட்பட மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த சோதனையில் ஏராளமான டிஜிட்டல் சாதனங்கள், ஆதார் மற்றும் பான் கார்டுகள் உள்ளிட்ட போலி அடையாள ஆவணங்கள், ₹20 லட்சத்திற்கும் அதிகமான ரொக்கப் பணம் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ₹4 லட்சம் மதிப்பிலான அமெரிக்க டாலரும் பறிமுதல் செய்யப்பட்டன.

தினகரன்
வரி விளம்பர பகுதியில்
பிறந்தநாள், திருமணநாள்
விளம்பரத்திற்கு மிகக்குறைந்த சலுகை கட்டணம்

அதிமுக கரைபோட்ட வேட்டியை துறந்த ஓபிஎஸ்

அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இதுவரை எங்கு சென்றாலும் அதிமுக கரை வேட்டியுடன் வலம் வந்த ஓபிஎஸ், சிங்கப்பூருக்கு சிகிச்சைக்காக சென்றுள்ள அவர் விமான நிலையத்தில் அதிமுக கரைபோட்ட வேட்டியை தவிர்த்து சாதாரண வேட்டி அணிந்து வந்தார். அருகில் அவரது மகன் ஜெயபிரதீப்.

பேஸ்புக் காதலியுடன் தகராறு போலீஸ்காரர் தற்கொலை

சேலம், நவ.9: சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே சுண்டமேட்டூர் பகுதியை சேர்ந்தவர் நவீன்குமார்(25). இவர் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பட்டாலியனில் போலீஸ்காரராக பணியாற்றி வந்தார். இரண்டு நாட்கள் விடுமுறையில் வீட்டுக்கு வந்தார். நேற்றுமுன்தினம் இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டில் இருந்த அவர் திடீரென தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுபற்றி தகவல் அறிந்த மகுடஞ்சாவடி போலீசார் அவரது உடலை மீட்டு இடைப்பாடி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுபற்றி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர். அதில், நவீன்குமார் கோவை பகுதியை சேர்ந்த பெண்ணை பேஸ்புக் மூலம் காதலித்து வந்துள்ளார். இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. காதலியுடன் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த நவீன்குமார் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது. அவர் காதலித்த பெண் யார்? என்று குடும்பத்தினருக்கு கூட தெரியவில்லை.

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஓ.அ.எண். 34/ 2023 - 2024 / தவஅ / நாள்: 07.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023-24** தலைப்பின் கீழ் **சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் (நெ) க(ம)ப** கோட்டங்கள் சார்ந்த பணிக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **27.11.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **10.11.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப, மதுரை வட்டம்.

செ.ம.தொ.இ /5917/ ஒப்பந்தப்புள்ளி / 2023

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின்

பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த அமைச்சர் பொன்முடி

சென்னை, நவ.9: சென்னையில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் 14வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளாமல் உயர்க்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி புறக்கணித்தார்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் 14வது பட்டமளிப்பு விழா, சென்னை சைதாப்பேட்டையில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது. தமிழ்நாடு ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.என்.ரவி தலைமையில் நடந்த இந்த பட்டமளிப்பு விழாவில், இந்திய தேசிய அறிவியல் தொழில்நுட்ப கழக தலைவர் அசுதோஷ் சர்மா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இளநிலை பட்டதாரிகள் 5,302 , முதுகலை பட்டதாரிகள் 3,318, தொழிற்கல்வி டிப்ளமோ 1,042, டிப்ளமோ 82, முனைவர் பட்டம் 24, எம்.பில். 8 மாணவர்கள் என மொத்தம் 9 ஆயிரத்து 776 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதலிடம் பெற்ற 485 மாணவ, மாணவிகளுக்கு, கவர்னர் ஆர்.என்.ரவி நேரடியாக பட்டங்கள் வழங்கி கவுரவித்தார்.

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பங்கேற்கவில்லை.

முன்னதாக, சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யாவிற்கு கவுரவ முனைவர் பட்டம் வழங்க ஒப்புதல் அளிக்காத ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவித்து காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவை தமிழ்நாடு அமைச்சர் பொன்முடி புறக்கணித்தார். அதை தொடர்ந்து நேற்று நடந்த திறந்தநிலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவையும் அவர் புறக்கணித்தார்.

இந்த பட்டமளிப்பு விழாவின் அழைப்பிதழில் அமைச்சர் பொன்முடியின் பெயர் இடம் பெற்று இருந்தது. ஆனால் அமைச்சர் தனது சொந்த ஊருக்கு சென்றிருந்ததால், தனக்கு விருப்பமில்லை என்று கூறி பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ளார் என தகவல் வெளியானது.

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்
பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:- உஸ்மான் கனி - 9843377165, கிரண் குமார். J ஜெயசுந்தரம் 9841292990.

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிட்டச் சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் & க.க.எ.	சுவாதீனம் வகை & நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி	நிர்ணய விலை (₹)	முன்வைப்புத் தொகை (₹)
1	க.க.எ. எண்: 11121080578 1. S. தீர்த்தமலை, 2. அஜந்தா நடேசன்	ஆக்கப்பூர்வ சுவாதீனம்-27-அக்டோபர்-2022	06-நவம்பர்-2023 தேதியன்று ₹.9,61,311.64/-	₹ 16,00,000/-	₹ 1,60,000/-

பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) /அசையா சொத்துக்கள் (கள்) பற்றிய விளக்கம் - பொருள்-I, 1308 சதுர அடி, கிராமநத்தம் R.S.No.207/26B, 27B, 222/1A, 1B, 2420 மற்றும் 2420 எண்.2420 /1, 2 திண்டிவனம் மாவட்டம், வானூர் தாலுகா, எறையூர் கிராமத்தில் அமைந்துள்ள, மேலும் எல்லை வடக்கே உள்ள நிலம் வள்ளியம்மைக்கு சொந்தமானது, தெற்கே: பொதுவான சொத்து, கிழக்கு, புறம், இது திண்டிவனம் பதிவு மாவட்டம் மற்றும் வானூர் துணை பதிவு மாவட்டம், பொருள்-II, 1308 சதுர அடி., (121.516 சதுர மீட்டர்) நிலம் மற்றும் கட்டிடம் தாங்கிய பிளாட் எண்.49, (121.516 SQ.MTR) பழைய எண்.227. எண். 26B, 27B), பழைய ச.எண்.240/1 (R.S.No.221/1A, 1B, 2) திண்டிவனம் மாவட்டத்தில் அமைந்துள்ள வானூர் தாலுக்கா, எறையூர் கிராமம், மற்றும் எல்லை: வடக்கு மூலம், எல்லை: கிழக்கு மூலம் : பிளாட் எண்.48, மேற்கு மூலம்: பிளாட் எண்.50, திண்டிவனம் பதிவு மாவட்டத்திற்குள் மற்றும் வானூர் துணைப் பதிவு மாவட்டம்.

பார்வையிடும் நாள் & நேரம்: 04-டிசம்பர் -2023 & 05-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
ஏலத் தேதி: 14-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 13-டிசம்பர்-2023
விற்பனை இடம்- T.S.P வளாகம் 2வது தளம், எல்லிஸ் நகர் 70 அடி சாலை சந்திப்பு, ராஜா சர் முத்தையா நகர், பை பாஸ் சாலை, மதுரை, தமிழ்நாடு -625016.
விற்பனை இடம்- 138, 2வது தளம், அமீன் மேனர், நுங்கம்பாக்கம், உயர் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 034

திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம். பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:- 1) விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து **"உள்ளது உள்ளவிடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளவாறு" "உள்ளது எதுவோ அது"** மேலும் **"உதவிசாரா"** நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். ஆர்வமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் **மும்பையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையுடன்** ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகல்பிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் நிர்ணயித்த நிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் உள்ளிட்டவை மேலும் அனைத்து பிற செலவுகள் மற்றும் மேற்கூறிய சொத்துகள் தொடர்பான விற்பனை சான்றிதழ் பதிவுக்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்/ கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 8) வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் இறுதி ஏலத் தொகையின் 25% (ஏற்கனவே செலுத்திய 10% முன்வைப்புத்தொகை சரிகட்டலுக்கு பிந்தையது) தொகையை செலுத்த வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். 9) விற்பனை விலையின் மீதி 75% ஆனது அதிகாரப்பூர்வ அதிகாரியால் வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதன் 15 நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியால் மேலும் தனி விருப்ப உரிமையில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். 10) அதிகாரப்பூர்வ **அதிகாரி** அவருடைய விருப்ப உரிமையில், முன்னறிவிப்புமின்றி, விற்பனைக்கான இந்த அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உரிமை கொண்டிருக்கிறார். 11) ஒருவேளை, கடனீட்டுக் கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அனைத்து நிலுவைகளும் மேற்கூறிய பெயரிலான கடன்தாரர் / உப-கடன்தாரர் மூலம் ஏலத் தேதிக்கு ஒரு வேலை நாள் முன்பு வரைக்குள்ளாக செலுத்தப்பட்டு விட்டால் பிறகு சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் M/S. முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு எதிராக ஏதேனும் பொறுப்பு / கோருரிமையின்றி அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் நாளது தேதி வரையான வட்டி மற்றும் செலவினங்களுடன் மேற்குறிப்பிட்டவாறு கடன்பொறுப்பை முழுமையாக தீர்க்குமாறு மேலும் நிலுவைகளை செலுத்துமாறு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) & 9 கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது தவறினால் கடனீட்டுச் சொத்து மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். கடன்தாரர்/கள் 30 நாட்கள காலத்திற்குள் சொத்து இடத்திலிருந்து அவர்தம் உரிமையளிக்கப்படாதப் பொருட்களை அகற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இல்லையெனில் அது அவர்தம் பொறுப்பு மற்றும் செலவில் சொத்து இடத்திலிருந்து அகற்றப்படும்.

இடம்: விழுப்புரம், தேதி :09-நவம்பர்-2023 ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

அதிமுக கரைபோட்ட வேட்டியை துறந்த ஓபிஎஸ்

அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இதுவரை எங்கு சென்றாலும் அதிமுக கரை வேட்டியுடன் வலம் வந்த ஓபிஎஸ், சிங்கப்பூருக்கு சிகிச்சைக்காக சென்றுள்ள அவர் விமான நிலையத்தில் அதிமுக கரைபோட்ட வேட்டியை தவிர்த்து சாதாரண வேட்டி அணிந்து வந்தார். அருகில் அவரது மகன் ஜெயபிரதீப்.

தமிழ்நாட்டின் பல இடங்களில் கனமழை பெய்யும்

சென்னை, நவ. 9: தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் அனேக இடங்களில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட கிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் பெய்துவருவதன் தொடர்ச்சியாக வட தமிழக கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் அனேக இடங்களிலும், தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் மழை பெய்துள்ளது. குறிப்பாக கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நேற்று கனமழை முதல் மிக கனமழை பெய்தது. ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் கனமழையும் பெய்துள்ளது. அதிகபட்சமாக திருப்பூண்டி, பெரியநாயக்கன் பாளையத்தில் 90மிமீ மழை பெய்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளில் கத்திவாக்கம், அம்பத்தூர், திருவொற்றியூர், சென்னை ஆட்சியர் அலுவலகம், தண்டையார்பேட்டை, தாமரைப்பாக்கம், கோடம்பாக்கம், உத்தண்டி, வானகரம், புழல், குன்றத்தூர், டிஜிபி அலுவலகம், அண்ணாபல்கலைக் கழகம், மாமல்லபுரம், தாம்பரம், சோழிங்கநல்லூர், மணலி, ஐஸ்அவுஸ், நுங்கம்பாக்கம், மதுரவாயல், திருவிக நகர், பெரம்பூர் ஆகிய இடங்களில் 50மிமீ முதல் 10 மிமீ வரை மழை பெய்துள்ளது.

தமிழ்நாட்டில் நேற்று மட்டும் 18 மாவட்டங்களில் கனமழை பெய்ததால் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியதால், சில இடங்களில் பாதிப்பு ஏற்பட்டது. அதனால் சில மாவட்டங்களில் ஆட்சியர்கள் நேரடியாக சென்று பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதுடன், மழை பாதிப்பில் சிக்காமல் இருக்க மக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புகளை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், மத்திய அரபிக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இது மேற்கு திசையில் நகர்ந்து அதே பகுதியில் இன்று வலுவிழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், குமரிக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலை கொண்டுள்ளது. இவற்றின் காரணமாக தமிழ்நாட்டில் அனேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். இதே நிலை 14ம் தேதி வரை நீடிக்கும்.

பருவமழை அனேக இடங்களில் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால், பெரும்பாலான மாவட்டங்களில் மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகங்கள் சார்பில், மழை பாதிப்புகளை சமாளிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

காலை 6-7 மணி, இரவு 7-8 மணி வரை அனுமதி

நீதிமன்ற அனுமதி நேரத்தை மீறி பட்டாசுகள் வெடித்தால் வழக்கு

சென்னை கூடுதல் கமிஷனர் எச்சரிக்கை

சென்னை, நவ.9: தீபாவளி பண்டிகையின் போது நீதிமன்றம் அனுமதி அளித்த நேரத்தை மீறி பட்டாசுகள் வெடித்தால் காவல்துறை சார்பில் வழக்கு பதிவு செய்யப்படும் என்று மாநகர கூடுதல் கமிஷனர் பிரேம் ஆனந்த் சின்கா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை வேப்பேரியில் உள்ள போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நேற்று மாநகர தெற்கு கூடுதல் கமிஷனர் பிரேம் ஆனந்த் சின்கா மற்றும் போக்குவரத்து கூடுதல் கமிஷனர் சுதாகர் ஆகியோர் கூட்டாக நிருபர்களிடம் பேசியதாவது:

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மாநகர காவல் எல்லையில் போலீஸ் கமிஷனர் உத்தரவுப்படி, 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தீபாவளி அன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகள் வெடிக்க வேண்டும். இந்த சட்டத்தை யாரேனும் மீறினால் வழக்கு பதிவு செய்யப்படும். பொதுமக்கள் தீபாவளியை பாதுகாப்பாக கொண்டாட வேண்டும். அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மட்டும்தான் பட்டாசுகள் வெடிக்க வேண்டும். அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்ககூடாது. பாதுகாப்பான இடங்களில் மட்டும் பட்டாசுகள் வெடிக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

பிரேம் ஆனந்த் சின்கா

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு

மாவட்ட நீதிபதியிடம் 3 பென் டிரைவ் ஒப்படைப்பு

ஊட்டி, நவ. 9: கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை ஊட்டியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. தற்போது இவ்வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்ட நிலையில், கூடுதல் எஸ்பி குமாரவேல் தலைமையிலான போலீசார் விசாரித்து வருகின்றனர். அவர்கள் வழக்கு தொடர்பான 4 பக்க அறிக்கையை கடந்த செப்டம்பர் மாதம் ஊட்டி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், வழக்கில் தொடர்புடைய ஜம்ஷீர் அலி, தீபு ஆகியோரிடம் கைப்பற்றப்பட்ட செல்போன்கள் மற்றும் சிம் கார்டுகளில் பதிவான தகவல் பரிமாற்ற விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டுள்ளது. பதிவான அந்த தகவல்களை பெற்ற சிபிசிஐடி போலீசார் அது தொடர்பான 3 பென்டிரைவ்களை மாவட்ட நீதிபதி அப்துல் காதரிடம் நேற்று ஒப்படைத்துள்ளனர். 3 பென்டிரைவ்களும் விரைவில் கோவையில் உள்ள ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு தகவல்கள் பதிவு செய்து பெறப்பட உள்ளது. இந்த ஆய்வு மூலம் சிபிசிஐடி போலீசாருக்கு முக்கிய ஆதாரங்கள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 34/ 2023 - 2024 / தவஅ / நாள்: 07.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023-24** தலைப்பின் கீழ் **சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் (நெ) க(ம)ப** கோட்டங்கள் சார்ந்த பணிக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **27.11.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **10.11.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப, மதுரை வட்டம்.
செ.ம.தொ.இ /5917/ ஒப்பந்தப்புள்ளி / 2023

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்
muthoot PAPPACHAN HOUSING FINANCE
பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:- உஸ்மான் கனி - 9843377165, கிரண் குமார். J ஜெயசுந்தரம் 9841292990.

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிட்டச் சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று **"உள்ளது உள்ளவிடத்தில்"**, **"உள்ளது உள்ளவாறு"**, **"உள்ளது எதுவோ அது"** மற்றும் **"உதவிசாரா"** அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் & க.க.எ.	சுவாதீனம் வகை & நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி	நிர்ணய விலை (₹)	முன்வைப்புத் தொகை (₹)
1	க.க.எ. எண்: 11116097141 1. கௌதம் அங்கப்பன், 2. அங்கப்பன் சித்தமுதலியார் 3. பூங்கொடி அங்கப்பன் (எ) பூங்கொடி அங்கப்பன்	ஆக்கப்பூர்வ சுவாதீனம்- 10-பிப்ரவரி-2023	04-நவம்பர்-2023 தேதியன்று ₹.7,89,807.41/-	₹ 11,00,000/-	₹ 1,10,000/-

பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) /அசையா சொத்துக்கள் (கள்) பற்றிய விளக்கம்- சேலம் பதிவு மாவட்டம், அயோத்தியாப்பட்டினம் துணைப் பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, அத்திக்கரைப்பட்டி கிராமம், மறு சர்வே எண்.145/2, P.A.4.23, மதிப்பீடு R.S.9.65,P.A 0.77½ சென்ட், எண்.65.9. மறு சர்வே எண்.145/1, P.A.0.25 CENTS, மதிப்பீடு R.S.0.56, இந்த ஏக்கரில் 0.12 ½ சென்ட், மொத்தம் 0.90 சென்ட் நிலம், இந்த ப்ளாட் எண்.16, 70க்கு அருகில் உள்ள இந்த ப்ளாட் எண்.16ல், வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ICH பின்வருவனவற்றிற்குள் அமைந்துள்ளது எல்லைகள்:, வடக்கே: ப்ளாட் எண்.15, தெற்கே: பிளாட் எண்.17, கிழக்கே: சிலோன் காலனி, மேற்கில்: 20 அடி அகலம், தெற்கே வடக்கு சாலை, சுற்றுப்புறம் : 38 ½ அடி, தெற்குப் பக்கம்: 38 ½ அடி, கிழக்குப் பக்கம்: 20 அடி, மேற்குப் பக்கம்: 20 அடி, மொத்தம் 770 சதுர அடி வீட்டின் தளம் மற்றும் அனைத்து வசதிகள் மற்றும் நடைபாதை உரிமைகளுடன்., மேலே கூறப்பட்ட சொத்து மறு சர்வே எண்.145/1 இல் அமைந்துள்ளது.

பார்வையிடும் நாள் & நேரம்: 04-டிசம்பர் -2023 & 05-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
ஏலத் தேதி: 14-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 13-டிசம்பர்-2023
விற்பனை இடம்- T.S.P வளாகம் 2வது தளம், எல்லிஸ் நகர் 70 அடி சாலை சந்திப்பு, ராஜா சர் முத்தையா நகர், பை பாஸ் சாலை, மதுரை, தமிழ்நாடு -625016.
விற்பனை இடம்- 138, 2வது தளம், அமீன் மேனர், நுங்கம்பாக்கம், உயர் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 034

திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம். பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:- 1) விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து **"உள்ளது உள்ளவிடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளவாறு"** **"உள்ளது எதுவோ அது"** மேலும் **"உதவிசாரா"** நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். ஆர்வமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் **மும்பையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையுடன்** ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகல்பிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் நிர்ணயித்த நிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் உள்ளிட்டவை மேலும் அனைத்து பிற செலவுகள் மற்றும் மேற்கூறிய சொத்துகள் தொடர்பான விற்பனை சான்றிதழ் பதிவுக்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 8) வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் இறுதி ஏலத் தொகையின் 25% (ஏற்கனவே செலுத்திய 10% முன்வைப்புத்தொகை சரிகட்டலுக்கு பிந்தையது) தொகையை செலுத்த வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். 9) விற்பனை விலையின் மீதி 75% ஆனது அதிகாரப்பூர்வ அதிகாரியால் வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதன் 15 நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியால் மேலும் தனி விருப்ப உரிமையில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். 10) அதிகாரப்பூர்வ **அதிகாரி** அவருடைய விருப்ப உரிமையில், முன்னறிவிப்புமின்றி, விற்பனைக்கான இந்த அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உரிமை கொண்டிருக்கிறார். 11) ஒருவேளை, கடனீட்டுக் கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அனைத்து நிலுவைகளும் மேற்கூறிய பெயரிலான கடன்தாரர் / உப-கடன்தாரர் மூலம் ஏலத் தேதிக்கு ஒரு வேலை நாள் முன்பு வரைக்குள்ளாக செலுத்தப்பட்டு விட்டால் பிறகு சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் M/S. முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு எதிராக ஏதேனும் பொறுப்பு / கோருரிமையின்றி அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் நாளது தேதி வரையான வட்டி மற்றும் செலவினங்களுடன் மேற்குறிப்பிட்டவாறு கடன்பொறுப்பை முழுமையாக தீர்க்குமாறு மேலும் நிலுவைகளை செலுத்துமாறு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) & 9 கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது தவறினால் கடனீட்டுச் சொத்து மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். கடன்தாரர்/கள் 30 நாட்கள காலத்திற்குள் சொத்து இடத்திலிருந்து அவர்தம் உரிமையளிக்கப்படாதப் பொருட்களை அகற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இல்லையெனில் அது அவர்தம் பொறுப்பு மற்றும் செலவில் சொத்து இடத்திலிருந்து அகற்றப்படும்.

இடம்: சேலம், தேதி :09-நவம்பர்-2023
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடு

சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம்

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, நவ. 9: நாடு முழுவதும் 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் குறித்து சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறியுள்ளார்.

2024ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான ஆயத்த பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் பணிகள், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் பணிகளில் அந்தந்த மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழகத்திலும் 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. 18 வயது நிறைவடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வருகிற 18ம் தேதி (சனி), 19ம் தேதி (ஞாயிறு) நடைபெறுகிறது.

இந்த நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல்துறை உயர் அதிகாரிகளின் மண்டல மாநாடு சென்னையில் இந்திய ஆணையத்தால் மறுஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில், 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு மற்றும் அதற்கான ஆயத்த பணிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்த கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்பார்கள். இந்த மாநாடு இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை ஜிஎஸ்டி சாலையில் உள்ள ஹோட்டல் ராடிசன் ப்ளூவில் நடைபெறுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ. / நாமக்கல்	ST-01(A)	1
2	மே.பொ / சி / க.உ.(ம) ஒ	13, 14	2
3	CE / IT & RAPDRP	39, 40, 41	3
4	மே.பொ / கொ & நி/ தூ.அ.மி.நி	3327-S (கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது)	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**
செ.ம.தொ.இ/5921/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
சென்னை - 32.

தமிழ்நாட்டில் கழிவு மேலாண்மை விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்திற்கு தற்காலிக அடிப்படையில் சுற்றுச்சூழல் ஆலோசகர்களுக்கான (கழிவு மேலாண்மை) மூன்றாம் நபர் முகமையை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறைப்படி) வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: தொ.3/ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்/ கோ.014509/ சுற்றுச்சூழல் ஆலோசகர் / 2023 நாள்: 07.11.2023

தமிழ்நாட்டில் கழிவு மேலாண்மை விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவுதல் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதல்.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை 09.11.2023 அன்று அல்லது அதற்குப் பிறகு **www.tenders.tn.gov.in & www.tnpcb.gov.in** ஆகிய இணையதளங்களில் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசி தேதி 08.12.2023 ஆகும்.

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சென்னை- 32
செ.ம.தொ.இ / 5969 / ஒப்பந்தப்புள்ளி / 2023

தெற்கு ரயில்வே
(கட்டுமான நிறுவனம்)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
எண்.SGCNMTP-23-6-CHSM-KLK-TEL
தேதி.03.11.2023

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு செயற் பொறியாளர், கட்டுமானம் மற்றும் மாநகர போக்குவரத்து செயல்திட்டம், தெற்கு ரயில்வே, சென்னை–31 அவர்கள், பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்கிறார்.

சின்ன சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி இடையே புதிய தடம் கட்டுமானம் செய்தல் தொடர்பாக சேலம் கோட்டத்தின் சின்ன சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி நிலையங்களில் தொலைதொடர்பு ஏற்பாடுகள் அமைத்தல்.

தோராய ரொக்க மதிப்பு ரூ. 255.29 இலட்சம்

பிணை வைப்பு தொகை ரூ. 2,77,700/–

பணியை முடிப்பதற்கான காலம்
9 மாதங்கள்

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் 27.11.2023 அன்று 14.00 மணி

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

Follow us on : twitter.com/GMSRailways

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION
HEAD OFFICE : 12, THAMBUSAMY ROAD, KILPAUK, CHENNAI - 600010
Ph. No. (044) 26426773 Email id : tncsc.tn@nic.in CIN : U15137TN1972SGC006157
BS6/042085/2023 **SHORT - E-TENDER NOTICE** Dated : 08.11.2023

Short E-Tender No : BS6/042085/2023-TNCSC/23-24

Tamil Nadu Civil Supplies Corporation invites Online electronic tender for **Purchase of "60,000 Metric Tonnes of Tur dal (Split-Husked & Fatka) (Indigenous) / Tur Dal (Split Husked -Imported) / Lentil locally known as Canadian Yellow Lentil (Split - Husked & Laired No.2) / Lentil locally known as Canadian Yellow Lentil (Whole - Husked & Laired No.2) as per AGMARK specifications."**

Complete short e-tender document can be viewed and downloaded from **https://tntenders.gov.in/nicgep/app**

The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III

Last Date and Time for Online Submission : **Upto 11.30 A.M. on 22.11.2023**

DIPR/ 5965 /TENDER/2023 **MANAGING DIRECTOR**

தீபாவளி போனஸ் இழுத்தடிப்பு

கொடநாடு எஸ்டேட்டில் தொழிலாளர்கள் போராட்டம்

கோத்தகிரி, நவ.9: நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே ஜெயலலிதா மற்றும் சசிகலா பங்குதாரராக உள்ள கொடநாடு எஸ்டேட்டில் 200-க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு கடந்த 2 ஆண்டுகளாக தீபாவளி பண்டிகை போனஸ் வழங்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை நெருங்கிய நிலையில் இதுவரை போனஸ் வழங்காததால் கொடநாடு எஸ்டேட் நிர்வாகத்தை கண்டித்து தொழிலாளர்கள், எஸ்டேட் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இதில் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர். காலை முதல் மதியம் வரை போராட்டம் நீடித்தது. இந்நிலையில், எஸ்டேட் மேலாளர் வெளியூரில் உள்ளதால் இன்று (9ம் தேதி) பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என கூறப்படுகிறது.

எடப்பாடி தலைமையில் நவ. 21ம் தேதி அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

நாடாளுமன்ற தேர்தல் குறித்து ஆலோசனை

சென்னை, நவ. 9: அதிமுக கொடி மற்றும் கட்சி பெயரை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இதனால் எடப்பாடி பழனிசாமி அணியினர் உற்சாகம் அடைந்துள்ளனர். இந்த நிலையில் அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வருகிற 21ம் தேதி சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கை: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சென்னையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் வருகிற 21ம் தேதி மாலை 4 மணிக்கு பூத் கமிட்டி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை மற்றும் மகளிர் அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான களப்பணி குறித்து மாவட்ட பொறுப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், மாவட்ட பொறுப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

100 நாள் வேலை ஊதியம் வழங்காததை கண்டித்து

ஒன்றிய நிதியமைச்சருக்கு கருப்புக்கொடி காட்டுவேன்

மாணிக்கம் தாகூர் எம்பி பேட்டி

விருதுநகர், நவ. 9: நூறு நாள் வேலைதிட்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து, விருதுநகரில் இந்தியன் வங்கி முன்பு காங்கிரஸ் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாணிக்கம் தாகூர் எம்பி அளித்த பேட்டி:

நூறு நாள் வேலைத்திட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் துவங்கி நடப்பு மாதம் வரை ஊதியம் வழங்கப்படவில்லை. உழைத்த பணத்தை தீபாவளி பண்டிகைக்கு முன்பாக வழங்க வேண்டும். விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.89 கோடி வரவேண்டும். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அடுத்த வாரம் விருதுநகர் வருவதற்கு முன்பாக பணத்தை வழங்க வேண்டும். இல்லையென்றால், அவருக்கு எதிராக நானே கருப்புக்கொடி காட்டுவேன். இந்தியா கூட்டணிக்கு மக்கள் நீதி மய்யம் கமல் வரவேண்டும். ராகுல் காந்தி யாத்திரையில் கலந்துகொண்ட கமல் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். ராகுல்காந்தி பிரதமரானால் ஜிஎஸ்டி வரிமுறை மாற்றப்படும். தமிழகத்திற்கு நியாயம் கிடைக்கும் என்றார்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
(தமிழகஅரசு நிறுவனம்)
மனை எண். 308 மற்றும் 309, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், LAL எதிரில்,
பாரத்ஸ்டேட்வங்கி கிளை அருகில், மூக்கண்டப்பள்ளி, ஓசூர்-635126.
தொலைபேசி எண் : 04344–278876 / 275596. மின்னஞ்சல் : bmhosur@tiic.org

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

மாநில நிதி கழகங்களின் சட்டம் 1951 பிரிவு 29ன் கீழ் ஓசூர் கிளை அலுவலகத்தில் கையகப்படுத்தப்பட்ட கீழ்கண்ட தொழில் நிறுவனத்தின் முதன்மை மற்றும் பிணைய சொத்து "உள்ளது உள்ளபடியே" என்ற நிலையில் மின்னணு ஏலம் மூலம் விற்பனைக்காக உள்ளன.

நிறுவனத்தின் பெயர் விவரம்	**M/s.** அச்சுதா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண்.3 [C-1], இ & இ, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஓசூர்– 635 109
கடன் நிலுவைத் தொகை (06.11.2023) (ரூபாயில்)	Rs.4,65,54,653/-
ஏலம் விடப்படும் சொத்தின் விவரம்	**முதன்மை சொத்து இயந்திரங்கள்: ஆட்டோ மொபைல் கூறுகள் நிலம் மற்றும் கட்டிடம்:** (உள்ளதுஉள்ளபடி) – S.No.682 [P], பிளாட் எண்.3[C-1], இ&இ, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஓசூர்– 635 109. 5859 ச.அடி
ஏலச் சொத்தின் குறைந்தபட்ச விலை (ரூ லட்சத்தில்)	**இயந்திரங்கள் :** Rs. 205.28 லட்சம். **நிலம் மற்றும் கட்டிடம் :** Rs. 244.89 லட்சம்.
டேவணித்தொகை (EMD) (ரூபாயில்)	**இயந்திரங்கள் :** Rs.5,00,000/- **நிலம் மற்றும் கட்டிடம் :** Rs.5,00,000/-
குறைந்தபட்ச அதிகரிப்பு தொகை (ரூபாயில்)	Rs.25,000/-

ஏல சொத்து பார்வையிடும் நாள் மற்றும் இடம்	டேவணித்தொகை (EMD) மற்றும் KYC சான்றுகள் சமர்பிக்க வேண்டிய கடைசி நாள்	ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்
நாள்: 28.11.2023 நேரம்: காலை:11.00 மணிமுதல் மாலை: 5.00 மணி வரை	நாள்: 04.12.2023 நேரம் : மாலை 4.00 மணிக்குள்	நாள்: 05.12.2023 நேரம்: காலை 11.00 மணிமுதல் மாலை 1.00 மணிவரை
பிணையச் சொத்து பார்வையிடும் இடம்	**M/s.** அச்சுதா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் - பிணைய சொத்து இடத்தில்	

ஆன்லைன் விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

1. ஏல சொத்தை 28.11.2023 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்வையிடலாம். மேலும் முன் கைப்பீடுத்தொகை (EMD) மற்றும் KYC சான்றுகள் 04.12.2023 அன்று மாலை 4.00 மணிக்கு முன்பாக ஓசூர் கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. ஆன்லைன் ஏலம் 05.12.2023 அன்று காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை **www.bankeauctions.com** என்ற இணைய தளத்தில் ஓசூர் கிளை அலுவலகத்தால் நடத்தப்படும்.
3. ஏல கேட்பு நீட்டிப்பு நேரம் 5 நிமிடங்கள் ஆகும். மேலும் ஏலதாரர் எத்தனை முறை வேண்டுமானாலும் (கடைசி அதிகபட்ச ஏல கேட்பில் இருந்து 5 நிமிடங்களுக்குள் ஏலக்கேட்பு என்ற நிபந்தனைக்கு உட்பட்டு) ஏலம் கோரலாம்.
4. கடன் நிபந்தனைகளின்படி கடன் நிலுவைத்தொகை மற்றும் இதர வகை செலவினங்கள் மீது வட்டி, கடன் கணக்கை முழுவதுமாக வசூல் செய்து முடிக்கும் வரை கணக்கிடப்படும்.
5. ஏல கேட்புதொகை, ஏலச்சொத்தின் குறைந்தபட்ச விலையை விட அதிகமாக இருத்தல் அவசியம் ஆகும்.
6. முன் கைப்பீடுத்தொகை (EMD) 'The TIIC Ltd., Hosur' என்ற பெயரில் ஓசூர் கிளையில் மாற்றத்தக்க வகையில் வரைவு காசோலை (DD / PAY ORDER) வாயிலாக செலுத்த வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் முன் கைப்பீடுத்தொகை (EMD) ஏல பங்கேற்பு படிவம் மற்றும் இதர KYC சான்றுகளுடன் இணைத்து மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்குள் ஓசூர் கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. ஏலத்தில் கலந்துகொள்வதற்கு முன்பாக ஏலதாரர்கள் **www.c1india.com** என்ற இணையதளத்தில் உள்ள ஏல விதிமுறைகளை வாசித்து தெரிந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
8. தகுதிபெற்ற ஏலதாரர்களுக்கு ஆன்லைன் ஏலம் குறித்து பயிற்சி '**M/s.C1 India Private Ltd.,** நிறுவனத்தின் மூலம் ஏல தேதிக்கு முன்பாக வழங்கப்படும். மேலும் இந்த சேவை வழங்கும் நிறுவனத்தை Plot No.301, 1st Floor, Udyog Vihar Phase2, Gurgaon, Haryana – 122 015, India என்ற முகவரியிலும் அதன் தொலைபேசி எண் **7418281709** யிலும் அதன் மின்னஞ்சல் முகவரியான **tn@c1india.com / enquiry@c1india.com** யிலும் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தாங்கள் இணைய தொழில் நுட்பம் சம்பந்தமாக முழுவதுமாக தயாராக இருப்பதை உறுதி செய்துகொண்டு ஏலத்தில் பங்கேற்க வேண்டும். ஆன்லைன் ஏலத்தின் போது ஏற்படக்கூடிய இணைய சம்பந்தமான பிரச்சனைகளுக்கு TIIC Ltd நிறுவனமோ அல்லது M/s.C1 India Private Ltd., நிறுவனமோ பொறுப்பேற்காது.
9. வெற்றிபெரும் ஏலதாரருடைய முன் கைப்பீடுத்தொகை (EMD), ஏல விற்பனை தொகையின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ளப்படும். மற்ற ஏலதாரர்களின் கைப்பீடுத்தொகை (EMD அவர்களுக்கு திருப்பி செலுத்தப்படும். முன் கைப்பீடுத்தொகை (EMD) எந்த வட்டியும் கிடையாது. வெற்றி பெற்ற ஏலதாரர், ஏல விற்பனை தொகையின் 25% தொகையை (முன் கைப்பீடுத்தொகைஉட்பட) ஏல நாளுக்கு மறுநாள் மாலை 4.00 மணிக்குள் TIIC Ltd., ஓசூர் கிளைஅலுவலகத்தில் செலுத்தவேண்டும். மீத முள்ள தொகையை ஏலம் உறுதிசெய்யப்பட்ட 30 நாட்களுக்குள் ஓசூர் கிளைஅலுவலகத்தில் செலுத்தவேண்டும். தவறும் பட்சத்தில் ஏலதாரர் ஏற்கனவே செலுத்திய தொகை முழுவதும் பறிமுதல் (forfeit) செய்யப்பட்டு மற்றும் சொத்துக்கள் மறு ஏலத்திற்கு கொண்டு வரப்படும். மீதி ஏலத் தொகையை குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தத வறிய ஏலதாரர், forfeit செய்யப்பட்ட தொகை மீதோ அல்லது ஏல சொத்தின் மீதோ எந்த உரிமையும் கோர முடியாது. அது சம்பந்தமான எந்த விதமான கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. TIIC Ltd.இ க்கு தெரியவராத, ஏலச்சொத்தின் மீது உள்ள மற்ற எந்த பொறுப்புகளுக்கும் (any liabilities) TIIC Ltd பொறுப்பேற்காது.
11. ஏலத்தில் பங்குபெற விரும்பும் அனைத்து ஏலதாரர்களும் கீழ்கண்ட KYC சான்றுகளில் சுய சான்றொப்பமிட்ட நகல்களை ஓசூர் கிளைஅலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

i) PAN Card , ii) Address Proof, iii) ID Proof

ஓரிஜினல் KYC சான்றுகள் சரிபார்ப்பதற்காக கிளை அலுவலகத்தில் காண்பிக்க வேண்டும். மேலும் தகவல்களுக்கு கிளை மேலாளர், TIIC Ltd., ஓசூர் ஐ தொடர்பு கொள்ளலாம்.

இடம் : ஓசூர்
நாள் : 06.11.2023
செ.ம.தொ.இ./1282/வரைகலை/2023
கிளைமேலாளர் ஓசூர் கிளை
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்